# 9.தொன்மத் திறனாய்வு

அலகு -4

ப. ரமேஷ்

# உள்ளடக்கம்

- முன்னுரை
- தொன்மம்
  - பல வகைகள்
- தொன்மமும் மதங்களும்
- தொன்மமும் இலக்கியமும்
- தொன்மமும் மொழியும்

# முன்னுரை

- போற்றப்படும் நாடுகள் -இந்தியா, எகிப்து, கிரேக்கம்
- தொன்மத்திற்கு எதிரான கருத்துகள் – சாக்கீரட்டீஸ், சோஃபிஸ்டுகள்
- இந்தியா- தமிழ்நாடு- பெரியார்
- "தொன்மத்தில் நம்பிக்கையிழந்த எந்தவொரு நாகரிகமும் அதன் இயல்பான வளப்பம் மிக்க படைப்பூக்கத்தை இழந்து நிற்க நேரும்""- நீட்சே
- கிரேக்க நாகரிகம் அழிந்ததற்கு தொன்மங்களில் மீதான நம்பிக்கை தகர்ப்பே- நீட்சே

# தொன்மம் என்பது என்ன?

- தொன்மங்கள் என்பது யாராலும் உருவாக்கப்படுவதில்லை.
- அவை தாமாகவே தோன்றுகின்றன.
- தொன்மச் செய்திகளில் குறிப்பிடப்படுபவர்கள் வரலாற்று நாயகர்கள் இல்லை.
- கற்பனையின் ஊற்றுக்கண்ணாக பிறப்பவர்கள் என்று கூறப்படுகிறது.
- தொன்மங்கள் உளவியலோடு பெரிதும் தொடர்புடையது.
- சமூகத்தின் கனவுகளையும், கற்பனைகளையும் கொண்டதாக அமைகிறது.
- அதோடு மட்டுமல்லாமல் தொன்மங்களுக்குக் காரணம் கற்பிக்க முடியாது.

# தொன்மம்- பல வகைகள்

- உலகம் தோற்றம் பற்றிய கதைகள்
- மனிதன் தோற்றம்
- காதல் கதை
- வெள்ளம்
- பஞ்சம்
- காடு
- கடல்
- சாவு
- மாபெரும் வீரர்கள்
- பெரும் போர்கள்
- ஐம்பெரும் பூதங்கள்
- ஆகிய கதைகளே தொன்மங்கள் - இவை தூய தொன்மங்கள் (Pure myths) or ஆதிகாலத் தொன்மங்கள் (Primitive myths)

# பின்னால் தோன்றிய தொன்மங்கள்

- மானிடவியல் அறிஞர்களின் ஆய்வுக்குப் பெரிதும் பயன்பட்டன தொன்மங்கள்
- நாட்டுப்புறக்கதைகள்
- நீதிக்கான கட்டுக்கதைகள் (புத்த ஜாதகக் கதைகள்)
- வனதேவதை, விலங்குள் பற்றியவை (பாம்பு கதைகள்
- விலங்குகளை மனிதமயப்படுத்தும் கதைகள் (பஞ்சதந்திரக்கதைகள்
- மாயத்தந்திரக் கதைகள் (விக்ர-வேதாளம்)
- இதிகாசங்கள் (இராமாயணம், பாரதம்)
- புராணக்கதைகள் (திருவிளையாடற் புராணம்
- இவை அனைத்தும் ஒன்றோடொன்று பிணைந்து கிடக்கின்றன.

# தொன்மங்களும் மதங்களும்

- – அறிவியல் புரட்சி – தொன்மங்கள் வெறுக்கப்பட காரணமாயின
- பகுத்தறிவு இயக்கங்கள் மதநிறுவனங்களுக்கு உரியவையாகப் பார்த்தன
- ஆனால்
  - தொன்மங்களில் வரும் நிகழ்ச்சிகள் கதைத்தலைவர்கள் எல்லாமே சமூக நிகழ்வுகள், அந்தச் சமூகத்தின் மொத்த சிந்தனை ஆற்றலின் வெளிப்பாடுகள்
  - "புராணங்களிலும் இதிகாசங்களிலும் வெளிப்படுவது ஒரு குறிப்பிட்ட தனிநபரின் தனிச் சிந்தனை அல்ல, மக்களின் கூட்டுச் சிருஷ்டித் தன்மையேயாகும் – மார்க்சிம் கார்க்கி

# தொன்மம் - ஆற்றல்

- ஆரம்ப காலத்து மனிதம் தான் எதிர்கொண்ட இயற்கையைத் தன் காலத்திய அறிவினால் புரிந்து கொள்ள முயன்ற முயற்சியின் வெளிப்பாடே
- இயற்கையின் மாபெரும் சக்தியின் முன் மனிதத்தின் இயலாமையை மாத்திரம் அல்ல, மனிதத்தின் கற்பனை ஆற்றலையும் தன் வாழ்க்கை அனுபவத்தின் மூலம் வடித்த முதல் கலை அமைப்பையும் இத்தொன்மங்கள் வெளிப்படுத்தி நின்றன.
- மந்திரம்,சடங்கு, கடவுள் ஆகியவை ஆதிகால மனிதத்தின் தன்மைகளைப் பெற்று விளங்குகின்றன.

- கிறிஸ்டோபர் கார்டுவெல்
  - மானுடத்தின் குழந்தைப் பருவத்தில் கதையிலிருந்து எவ்வாறு மதத்தைப் பிரிக்கமுடியும். இரண்டுமே பொருளாதாரப் பணிகளைச் செய்தன, சமூகப் பணிகளை ஏற்றியிருந்தன
- கார்ல் மார்க்சு
  - செவ்வியல் காலக் கலைக்கான விதைகளாகவும் ஆயுதக் கிடங்குகளாகவும் இத்தொன்மங்கள் விளங்கின.

தொன்மங்களில் இருந்துதான் மதக் கடவுளுக்கான கதைகள் மாற்றி உருவாக்கம் செய்யப்பட்டுள்ளன.

# தொன்மத்திற்கும் மதத்திற்குமான உறவு

- இரண்டு வகையாக
  - மாயாஜாலம், மந்திரம், இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் ஆகியவற்றில் நெருக்கமானஉறவு
  - புனிதம், ஒழுக்கம் ஆகியவற்றில் எதிர் உறவு
- கீழை நாட்டில்
  - இந்துக்கள், பௌத்தர்கள் வரலாற்றையே புராணங்களாகவும் ஜாதகக் கதைகளாகவும் உருமாற்றினர்.
- மேலை நாட்டில்
  - நீட்சே
    - உண்மையிலேயே ஏசு சிலுவையில் அறையப்பட்டது. அவரை சிலுவையில் அறைந்தவர்களே அவரைத் தெய்வமாக்கிக் கொண்டாடிய போதுதான்

# தொன்மமும் இலக்கியமும்

- தொன்மக்கதைகள் இலக்கியமாயின
- தொன்மக்கதைகளை எதிர்த்தவர்கள் தொன்மத்தைக் கொண்டே எதிர்த்தனர் (இராமன் – இராவணன்)
- கிறிஸ்டோபர் கார்டுவெல்
  - தொன்மங்கள் உயிர்ப்பொருளாக விளங்குகின்றன. சமூகத்துடன் துடிப்புள்ள உயிர்த்தொடர்பு கொண்டு விளங்குகின்றன. சமூகத்தின் ஒவ்வொரு நுண் கூறுகளுக்குள்ளும் நுழைந்து ஊடுருவிச் செல்கின்றன
- உளவியல் அறிஞர் யுங்
  - இத்தொன்மங்கள் மானுட இனத்திற்கே பொதுவான நனவிலிக் கூட்டுமனத்தில் தொல் படிவங்களாகப் படிந்து கிடப்பதன் வெளிப்பாடு

# அறிஞர் யுங் கருத்துகள்

- 1. கவிஞர் தனது அனுபவத்தைத் திறம்பட வெளிபடுத்தத் தொன்மங்கள் துணை செய்கின்றன
- 2. பெரும் படைப்புகள் ஒரு பெருங்கனவு போல நமக்குள் பரவுதற்குக் காரணம் அவை முழுவதுமானத் தம்மை விளக்காதது ஒரு காரணம், மற்றொன்று பன்முகப்பட்ட பொருள் கொண்டிருப்பதாகும்
- 3. கனவானது முழுவதும் அடிமனத்தால் (Unconscious) உருப்பெறுகிறது. ஆனால் கவிதை அடிமனத்திலிருந்து உருவானாலும் கவிஞனின் அறிமனத்தால் ( conscious) செப்பனிடப்படுகிறது.

- 4. தொன்மங்கள் மனித இனத்திற்கும் முந்தியவைகளாக இருக்க வாய்ப்புண்டு
- பாரதிதாசன்
  - சஞ்சீவி பர்வதத்தின் சாரல்
  - கண்ணகி புரட்சிக் காப்பியம்
  - மணிமேகலைக் காப்பியம்
    இரணியன் ( அல்லது) இணையற்ற வீரன்
- மார்க்சிம்  கார்க்கி
  - நாட்டுப்புறக் கதைகளைக் கொண்டு சிறுகதைகளைப் படைத்தார்
- புதுமைப்பித்தன்
  - அகலிகை கதை உட்பட பல கதைகள்
- சங்க இலக்கியத்தில்
  - ஒரு முலை இழந்த திருமாவுண்ணி – சிலப்பதிகாரமானது
  - புகழேந்தி. சங்கரதாஸ் சுவாமிகள்
  - கருணாநிதி உள்ளிட்டோர் தொன்மத்தைக்கொண்டு இலக்கியங்களைப் படைத்தனர்

- ரெனிவெல்லாக்
  - “உலகப்புகழ் பெற்ற படைப்புகள் எல்லாம், புதிதாகக் கதையை உருவாக்கிப் படைக்கப்பட்டவைகளைவிடப் படைய தொன்மங்களின் மேல் மறுபடைப்புச் செய்யப்பட்டவைகளாகவே இருக்கின்றன”
- நார்த்ராப் ப்ரை
  - இலக்கியத்தில் வரும் கடவுளர்கள் எல்லாம் கதையில் வரும் கதை மாந்தர்களே, தெய்வீகத் தன்மைகள் எல்லாம் கதைத்தொழில் வேலைப்பாட்டின் ஒரு கூறே

# நார்த்ராப் ப்ரை - கருத்துகள்

- 1. தொன்மம் என்பது கடவுளர்களையோ கடவுளைப் போன்ற மனதர்களையோ கதைமாந்தர்களாகக் கொண்ட ஒரு கதைதான்
- 2. அதன் தோற்றம் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்டது.
- 3. அது இயற்கை இறந்த நிகழ்ச்சிகளைத் தன் சொல் முறையாகக் கொண்டிருக்கும்.
- 4. அது வனதேவதைக் கதைகளிலிருந்து (Fairy tales) வேறுபட்டது
- 5. தொன்மத்திலுள்ள தொல்படிவங்கள் ஒரு கவிதையை மற்றொரு கவிதையோடு இணைக்கும் குறியீடுகள். இக்குறியீடுகள் இலக்கிய உலகை ஒருமுனைப்படுத்த உதவும்

- 6.தொன்மம், சடங்கு, கனவு, இலக்கியம் ஆகியவை நெருங்கிய தொடர்புடையவை. எனவே ஒரு தொன்மவியல் திறனாய்வாளன் மானுடவியல் உளவியல் சமூகவியல் ஆகிய வளர்ந்து வரும் துறைகள் தருகின்ற சிந்தனைகளைத் தெரிந்திருக்க வேண்டும்
- 7. தொன்மம் மனிதர்களின் அனுபவத்தைச் சித்தரிப்பதோடு அதற்கு விளக்கமும் தருவதால் அது ஒரு கலைக்களஞ்சியம் போன்று கருதத்தக்கது.
- 8.இலக்கியக் கருக்கள் எல்லாமே தொன்மத்திலிருந்து தோற்றம் பெற்றன

# தொன்மமும் மொழியும்

- கார்க்கி
- ஒரு மித்த நடவடிக்கையின் பகுதியாகவே மொழி இருக்கிறது
- மனித கூட்டாற்றலின் ஒரு பகுதியே மொழி, தொன்மமும் ஒரு மொழி தான்
- குறியீடுகள் இல்லாமல் மக்கள் நடுவில் மொழித் தொடர்பு என்பது இன்றும் இல்லை
  - கிழித்த கோட்டைத் தாண்டமாட்டாள்
  - இந்த போறான் சகுனி
  - பெரிய்ய அரிச்சந்திரன்
  - மன்மதன்னு நெனப்பு
  - லாரிகளைப்பாரு யமன் மாதிரி
  - கும்பகர்ணன் மாதிரி

- சமூகப் பிரக்ஞையை உருவாக்கும் மொழியாகவே தொன்மங்கள் விளங்குகின்றன.
- படைப்புத் தொழிலுக்கே அடிப்படையாக உள்ள எடுத்துரைத்தல் என்ற மனித மனப்பான்மையை இத்தொன்மங்கள்தாம் பிஞ்சு வயதிலேயெ உருவாக்கி விடுகின்றன.
- மிகச் சுருக்கமான விளக்கும் தன்மையுடையது
  - இராமன் தான் வரவில்லை இராவணர்களுக்குமா பஞ்சம்?

- லெவிஸ்டாராஸ்
  - தொன்மங்களை எவ்வாறு வாசிக்க வேண்டும் என்று இன்றைய மனிதனுக்குத் தெரியாமல் போயிற்று
  - விசாரணைக்கு  உட்படுத்தும் பொருள்களில் தாம் தொன்மைக்கால மனிதனுக்கும் இன்றைய மனிதனுக்கும் வேறுபாடு இருக்கிறது.
    - அவர்கள் கண்ணுக்குத தெரிந்த  பருப்பொருட்களை ஆராய்ந்தனர். இன்றைய மனிதன் கண்ணுக்குத் தெரியாத நுட்பமானப் பொருள்களை ஆராய்கிறான்)

- தமிழ்நாட்டில் திராவிட இயக்கங்கள் பார்வை வேறானது.
- தொன்மங்களிடமிருந்து விலகுவது மக்களிடமிருந்து விலகுதலைக் குறிக்கும்.
- கார்க்கி
  - முன்பே கிராமியக் கதைகளிலும் கூட்டுக் கதைகளிலும் இல்லாத உலகப் பிரதிநிதித்துவமுள்ள மாதிரிப் படைப்பு ஒன்றை கூட தனிநபரின் மேதாவிலாசம் சிருஷ்டிக்க வில்லை. இவை கூட்டுச் சிருஷ்டித் தன்மையின் ஆற்றலை நிதர்சனப்படுத்துகின்றன.

# 11. அமைப்பியல், பின் – அமைப்பியல், சிதைவாக்கத் திறனாய்வு

அலகு -4

ப. ரமேஷ்

# உள்ளடக்கம்

- முன்னுரை
- அமைப்பியல் வரையறை
- மொழிக்கிடங்கு, பேச்சு மொழி
- குறிப்பான் குறிப்பீடு
- இணை முரண்கள்
- தளப்பார்வை - காலப்பார்வை
- இணைநிலை உறவு சேர்க்கை நிலை உறவு
- பனுவலும் அமைப்பியல் திறனாய்வும்
- பனுவலும் வாசிப்பும்
- அமைப்பியலும் விளாதிமிர் பிராப்பும்
- பின் அமைப்பியல்
- ழாக் தெரிதாவும் வரிவடிவமும்
- ழாக் தெரிதாவும் திறனாய்வும்
- சசூரும் தெரிதாவும்
- ழாக் லக்கானும் சிதைவாக்கத் திறனாய்வும்
- மிகயீல் ஃபூக்கோவும் சிதைவாக்கத் திறனாய்வும்
- பின் அமைப்பியல் சில – விமர்சனக் குறிப்புகள்
- அமைப்பியலுக்கும் பின் அமைப்பியலுக்கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமைக்கூறுகள்

# முன்னுரை

- இலக்கியம் ஒரு புறப்பொருள் , அறிவார்ந்த விளக்கத்திற்கு உட்படுத்தப்படும் எனக் கூறியது – உருவவியல் (இரஷ்யா)
- அமைப்பியல் பிரெஞ்சு நாட்டில் தோன்றியது
- லெவிஸ்டிராஸ் ஆல் மானிடவியல் துறையில் முதலில் பயன்படுத்தப்பட்டது
- ரோலண்ட் பர்த் இலக்கிய ஆய்வுக்குப் பயன்படுத்தினார்
- பிரான்ஸ் முதல் அமெரிக்க ஐரோப்பிய நாடுகளில் பயன்படுத்தப்பட்டது.
- மானுடவியல், உளவியல், சமூகவியல், மொழியியல் போன்ற சமூக அறிவியல் துறைகளுடன்
- இயற்பியல், உயிரியல், கணிதவியல் முதலிய இயற்கை அறிவியல் துறைகளிலும்
- 1982இல் தமிழவன் தமிழில் பயன்படுத்தினார்

# அமைப்பியல் வரையறை

## அமைப்பியல் விளக்கம்

- அமைப்பு என்பது ஒரு சமிக்ஞை அதன் வழியாக எப்போதும் மாறும் செய்திகள் போய்க்கொண்டே இருக்கின்றன. -லெவிஸ்ட்ராஸ்
- ஒரு முழுமையின் உள்ளுறுப்புகளுக்கு இடையே உள்ள உறவுகளில் காணப்படும் பல தளங்களின் தன்மையை அறிவதுதான் அமைப்பு பற்றிய அறிவாகும். லூயி அல்தூசர்
- தோற்றத்திற்கு அடியில் மற்றொரு உள்ளோடும் ஒழுங்குமுறை இயக்கம் கொண்டிருக்கிறது. உள்ளோடும் ஒழுங்குதான் அமைப்பு. அந்த அமைப்பைக் கண்டுபிடித்து விளக்குவதுதான் அமைப்பியல் திறனாய்வின் வேலை – ழாக் லக்கான்
- மனிதன் தன் மொழிமூலம் உலகைப் புரிந்துகொள்ள கட்டுகின்ற கருத்து மாதிரிகள் மன அடித்தளத்தில் அமைந்து கிடக்கின்றன். இந்தக் கருத்து மாதிரிகள்தான் அமைப்பியல்வாதத்தின் ஆய்வுப்பொருள் – ஃபிரடெரிக் ஜேம்சன்

# சசூரின் மொழி பற்றிய சிந்தனைகள் மொழிக்கிடங்கு (Langue), பேச்சுமொழி (Parole)

- மொழி சிக்கலானது, குறுக்கும் நெடுக்குமாக இயங்குவது.
- மொழிக்கிடங்கு -
- பேச்சு
- மொழிக்கிடங்கு – மொழியின் முழுமையான அமைப்பு,- அது உருவம் இல்லாது
- பேச்சு – குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட இடத்தில் மனிதன் பேசுவது
  - 1.அகமொழிவடிவம். 2. புறவடிவம் (அ.அ. மணவாளன்)
  - 1.சமிக்ஞை, 2. செய்தி - ரோமண்ட் யாக்கப்சன்
  - 1.மொழியின் தகுதி 2. பயன்படு நிலை -நோம் சாம்ஸ்கி

## எ.கா.

- விதிகளோடு கூடிய செஸ் விளையாட்டு – மொழிகிடங்கு
- ஒரு காயை நகர்த்துவது – பேச்சு
  - ஒரு காயை நகர்த்தும் போது எல்லா விதிமுறைகளையும் பின்பற்றுவதில்லை
  - ஆனால் செஸ் விளையாட்டின் முழுமையான விதிமுறைகளின் அடிப்படையில்தான் வெவ்வேறு விதமான விதத்தில் காய்கள் வெட்டப்படுகின்றன.
  - இந்த ஒழுங்கமைவு விளையாட்டின் விதிமுறைகள் – கண்ணுக்குத் தெரிவதில்லை
  - செஸ் விளையாட்டின் மொத்த ஒழுங்கமைவு மொழிக்கிடங்கு
  - ஒவ்வொரு காயை நகர்த்துதல் – பேச்சு
  - மொழிக்கிடங்கு – பனிபாறை, பேச்சு – அதன் முனை
  - மரபு சார்ந்த பண்பாடு – மொழிக்கிடங்கு
  - சடங்கு நிகழ்த்துவது – பேச்சு
  - அழகியல் தத்துவம் – மொழிக்கிடங்கு
  - இலக்கியப் பனுவல் - பேச்சு

# சசூரின் மொழி பற்றிய சிந்தனைகள் குறிப்பான்(Signifier), குறிப்பீடு (Signified)

- மொழி – பல குறிகளால் நெறிப்படுத்தப்பட்ட அமைப்பு
- இருவகை இயக்கங்கள்
  - ஒரு சொல் தன்னையும் குறிக்கின்றது
  - பிறிதொன்றையும் குறித்து நிற்கிறது.
  - தன்னைக் குறிப்பது – குறிப்பான்
  - பிறிதொன்றைக் குறிப்பது – குறிப்பீடு
  - தொல்காப்பியர் – சொன்மை, பொருண்மை
  - பனை என்ற ஒலியமைப்பு குறிப்பான்
  - பனை என்ற பொருள் குறிப்பீடு
  - குறிப்பானுக்கும் ஆது குறிக்கின்ற பனை என்ற பொருளுக்கும் எந்தவித காரண காரிய உறவுமில்லை
  - குறிப்பீட்டிற்கும் குறிப்பானுக்கும் நம் மூளைக்கும் தான் தொடர்பு
  - மனித மூளையில் கட்டமைத்த கருத்தாக்கத்தையே குறிக்கிறது.

# மற்றொரு விளக்கம் - **வேறுபடுத்துதல்**

- மொழி பல அலகுகளால் ஆனது. இந்த அலகுகள் மற்றொரு அலகுடன் கொள்கிற உள்வின் மூலமாகத்தான் மொழிக்கு அர்த்தம் வந்து வாய்க்கிறது.
  - கண் என்ற ஒலி வடிவம், மண் என்ற ஒலி வடிவத்திலிருந்து தன்னை வேறுபடுத்திக் காணும் போதுதான் இரண்டுமே அர்த்தம் பெறுகின்றன.
  - நீரை அசுத்தப்படுத்தாதீர்கள்
  - நீரும் கெடும், நீரும் கெடுவீர்
  - போக்குவரத்து – பச்சை, மஞ்சள், சிவப்பு இவ்வற்றிக்கான பொருள் காரணம் – பரஸ்பர உறவும் சூழல் அமைப்பும்
  - குறிகளுக்குக் கிடைக்கும் அர்த்தம் தன்னிச்சையானது. காரண காரியங்களுக்குள் அடங்காதது.
  - மொழி இடுகுறிப் பெயர்களை (மண், மலை) மட்டும் கொண்டது.
  - காரணம் கருதி இடும் ( பறவை வளையல் )காரணப் பெயர் சதூர் பார்வையில் ஒரு மாயையே

# இணை முரண்கள்(Binary Opposition)

- தமிழில் இருநிலை எதிர்வு (தி.சு.நடராசன்)
- துருவ முரண்பாடுகள் ( எச்.பாலசுப்பிரமணியம்)
  - பிறப்பு xஇறப்பு;
  - பகல்xஇரவு
  - தோற்றம் x முடிவு
  - வெப்பம் x குளிர்
  - நன்மை x தீமை
  - இயற்கை x செயற்கை
  - கறுப்பு x வெள்ளை போன்றவை
  - இராமன் xஇராவணன்
  - மனிதன் x அரக்கன்
  - கருத்துகளை புரிந்து கொள்வதற்கு அடிப்படையே வேறுபட்ட இணைமுரண் கள் தான்

# தளப்பார்வை(Synchronic Analysis)
# காலப்பார்வை ( Diachronic Analysis)

- தளப்பார்வை -நிச்சயிக்கப்பட்ட காலத்தில், அல்லது மையத்தில் இயங்கிக் கொண்டிருக்கிற மொழியின் பங்கை ஆராய்வது ஆகும். இது ஒரு நொடியில் நிழற்படம் எடுப்பது போன்றது.
- காலப் பார்வை -வரலாற்று அடிப்படையில் மொழியின் மாற்றத்தை விளக்குவது
  - மொழியாராய்ச்சியல் காலப்பார்வை தேவையில்லை
  - அழகியல் தத்துவம் எவ்வாறு ஓர் அமைப்பாக இயங்குகிறது என்பதை கண்டடைந்தால் போதுமானது. - சசூர்

-----------------------------------

## இணைநிலை உறவு (Syntagmatic Relation)
## சேர்க்கை நிலை உறவு (Paradigmatic Relation)

- இணைநிலை உறவு -கிடைக்கோட்டு நிலையில் அர்த்தம் கொள்ளுதல்
  - அவர் கள் குடித்தார் ஒன்றை ஒன்று இணைத்து பொருள் கொள்வது
- சேர்க்கை நிலை உறவு – குத்துக்கோட்டு நிலையில் அர்த்தம் கொள்ளுதல்
  - எதைக் குடித்தார்
  - சாராயம் அல்ல,
  - பிராந்தி அல்ல.
  - கஞ்சா அல்ல,
  - அபின் அல்ல. என மொழிகிடங்கிலிருந்து குத்துக் கோட்டில் வருவது

# பனுவலும் அமைப்பியல் திறனாய்வும் (Text and Structuralism)

- புதுத்திறானாய்வாளர்கள் ( உருவவியல்) பனுவலுக்கு முக்கியத்துவம் அளித்தனர். ஆனால் அது எழுத்தாளர்களால் எழுதப்படுவது என்று எண்ணினர்.
- ஆனால் அமைப்பியல்
  - பனுவல் எழுத்தாளர்களால் எழுதி வெளியிடப்படுவது அல்ல. அது வாசகர்களால் உருவாக்கப்படுவது
  - வாசகர்கள் தங்கள் தரத்திற்கேற்ப தங்களுக்கான பனுவலை தாங்கே அமைத்துக் கொள்கின்றனர்.
  - பனுவல் என்பது எழுத்தாளர்களின் படைப்பல்ல. அது சமூகத்தின் உற்பத்திப்பொருள்.
- ஒரு சமூகத்தில் ஐந்து உறுப்புகள் குறிப்பிட்ட சூழலில் ஒன்றிணையும் போது இலக்கியம் உற்பத்தியாகிறது. – டெர்ரி ஈகிள்டன்
  - 1.பொது உற்பத்தி முறை
  - 2. இலக்கிய உற்பத்தி முறை
  - 3. பொதுக் கருத்தாக்கம்
  - 4. எழுத்தாளரின் கருத்தாக்கம்
  - 5. அழகியல் கருத்தாக்கம்

- பனுவலுக்குள் நாம் நினைப்பதும் இருக்கிறது, நினைக்காததும் இருக்கிறது.
- பனுவலுக்குள் நனவிலி மனமும் இருக்கிறது
- இன்மை (Nothingness)
- "இன்மை எல்லா இருப்புகளையும் கொண்டிருக்கிறது"
- க்வாண்டம் இயற்பியல் – ஒன்றுமில்லாத சூன்யத்திலிருந்து திடப்பொருள் தோன்ற முடியும் என்கிறது.
- ஒரு மணல் பரப்பு- குவித்தல் – பள்ளம்
- பள்ளம் (anti matter) குவியல்(matter)
  - இலக்கியப் பனுவலிலும் இன்மைதான் எல்லா இருப்புகளையும் கொண்டதாக இருக்கிறது. அந்த இன்மைகளைத் தேடி அடைவதுதான் இலக்கியத் திறனாய்வின் உண்மையான வேலைப்பாடாக இருக்கமுடியும்.

# பனுவல் குறித்த மற்றொரு கருத்து

- எந்தவொரு பனுவலும் சமிக்ஞைகளின் கூட்டம்தான்
- குறிப்பிட்ட சமிக்ஞையின் தொகுதி, ஏதோவொரு ஊடகத்தின் மூலமாக அனுப்பப்பட்டுக் குறிப்பிட்ட சமிக்ஞைகளின் தொகுதி மூலமாகப் பெறப்படுமானால் அந்தத் தொகுப்பு பனுவல்
- பனுவலை வாசகர் தமக்கேற்ப அர்த்தப்படுத்திப் புரிந்து கொள்வதற்குக் காரணம், அந்த வாசகரும் சமிக்ஞை தொகுதியைத் தனக்குள் காப்பாற்றி வைத்துக்கொண்டிருக்கிறார் என்பதால்தான்
- இலக்கியத்திறனாய்வின் வேலை குறிப்பிட்ட அந்தச் சமிக்ஞை விதிகளைக் கண்டுபிடிப்பதுதான் – ரோலண்ட் பர்த்
- "எனவேதான் எழுத்தாளர் இறந்து போனார்"
- "பனுவல் என்பது பல நாகரீகங்களிலிருந்தும் பல பண்பாடுகளிலிருந்தும் பெற்றுக்கொண்டு பல தளங்களில் நுண்மையாக அடுக்கப்பட்ட மேற்கோள்களே"
- தனிநபர்வாதம் தகர்க்கப்பட்டு கூட்டு மனநிலை என்ற கருத்தாக்கத்தைப் புதுப்பிக்கிறது.

# பனுவலும் வாசிப்பும்

- "பனுவலுக்குள் வாசகர் அல்லது திறனாய்வாளர் எழுத்திற்கு வெளியே போவதும் உள்ள போவதுமாகிய இருவகைச் செயல்களையும் ஒரே நேரத்தில் செய்ய வேண்டும்"
- புவியியல் ஆராய்ச்சியார் போன்று இலக்கியத்திறனாய்வாளர் செயல்படவேண்டும்
- பனுவலை மதிப்பீடு செய்து தீர்ப்புக் கூறும் மரபார்ந்த தன்மையிலிருந்து விடுதலை பெறவேண்டும்
- சாராம்சத்தை மறுப்பது, (சிலம்பு -ஊழ்வினை)
- அர்த்தங்களின் ஒருமைப்பாட்டைப் பனுவலில் தேடாமல் அர்த்தங்களின் வேறுபாட்டுத் தன்மைக்கு அழுத்தம் கொடுத்து வாசிப்பதுதான் சரியான வாசிப்பு

- ரோலண்ட் பர்த் – தெ பிளஷர் ஆஃப் தி டெக்ஸ்ட் ( The Pleasure of the Text)
- இலக்கிய இன்பம் = பாலியல் இன்பம் (Pleasure)
- இலக்கியப் பனுவலை உணர்ந்து வாசித்து இன்பம் அடையவது என்பது பாலியல் இன்பத்தின் உச்சகட்ட நிலைக்கு (Jouissance) ஒப்பானது

# வாசிப்பு அனுபவம் – ரோலண்ட் பர்த்

இந்த ஆனந்தக் களிப்பை எய்தும்போது இருப்பின் கடைசி எல்லையை ஏதொவொன்று பிடித்து உலுக்கியது போலவும் தன்னுணர்வின் ஒரு பகுதியை அது எடுத்துக் கொண்டு அதனுடைய உணர்வின் ஒரு பகுதியைத் தந்தது போலவும் தோன்றுகிறது. அதாவது வரலாறு, பண்பாடு மற்றும் உளவியலின் அடிப்படைகள் ஆட்டம் கண்டது போன்ற, –மேலும் 'ரசித்தல்' உணர்வு, மதிப்பீடுகள், நினைவுகள் எல்லாமே புதிதாகி விட்டது போன்ற – அன்றாட வாழ்வின் சலிப்பு கலகலப்பாக மாறியது போன்ற – அனுபவம் ஏற்படுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, மொழியுடன் நாம் எதிர்வினை புரியும்போது ஏதோ ஒருவிதமான பதற்றம் அல்லது நிலநடுக்கத்தின் உணர்வு தோன்றுகிறது[6].

# அமைப்பியலும் விளாதிமிர் பிராப்பும்

- விளாதிமிர் பிராப் – இரஷ்யா – உருவவியல் கோட்பாட்டாளர்
- நாட்டுப்புறக் கதைகளின் உருபனியல் (Morphology of The Folktale 1928)
- இந்நூலின் ஆங்கில மொழியாக்கம் 1958
- அடுக்குகளை அகற்றி மூல அமைப்பை கண்டறிந்தார்
- கதைகளின் மூலஅமைப்பு – கதைமாந்தர்கள் , அவர்களின் செயற்கூறு மூலமாகத் திறந்து காட்டிவிட முடியும்
- கதைமாந்தர்கள் மாறிக்கொண்டே இருந்தாலும் அவர்களின் செயல்கூறு நிச்சயிக்கப்பட்டவை

# நான்கு பொது விதிகள்

- 1. கதைமாந்தர்களின் செயல்கூறுகள் (functions) எப்படி, யாரால் நிறைவுபடுத்தப்பட்டன என்பவை பற்றி கவலைப்படாமல், இவைகள் கதைக்கு ஆதாரமாக நிலையான கூறுகளாக அமைந்துள்ளன.
- 2. கதைகளில் அமைந்துள்ள "செயற்கூறுகள்" அளவிடக்கூடியதாகும்
- 3. செயற்கூறுகளின் வரிசை முறை எப்பொழுதும் ஒரே மாதிரியானதாகும்
- 4. கதைகள் பல்வேறு தன்மையுடையதாக இருந்தாலும் அமைப்பைப் பொறுத்தவரை அனைத்தும் ஒரே மாதிரியானவைதான்

# விளாதிமிர் பிராப்- செயற்கூறுகள் 31

அவையாவன:[8]

1. வெளியேற்றம் (Absentation)
2. தடை (Interdiction)
3. தடை மீறல் (Violation)
4. வேவு பார்த்தல் (Reconnaissance)
5. செய்தி அறிதல் (Delivery)
6. சூழ்ச்சி (Trickery)
7. உடன்படுதல் (Complicity)
8. கொடுஞ்செயல் (Villainy)
9. இணக்கம் (Meditation)
10. மாற்றுச் செயல் தொடக்கம் (Beginning Counter action)
11. புறப்படல் (Departure)
12. கொடையாளியின் முதல் செயல் (The first function of Donor)
13. தலைவனின் எதிர்வினை (The Hero's Action)
14. மந்திரக் கருவி பெறல் (Receipt of a magical Agent)
15. வழிகாட்டப்படல் (Guidance)
16. போட்டி (Struggle)
17. அடையாளமிடல் (Branding)
18. வெற்றி (Victory)
19. குறைநீக்கம் (Lack Liquidated)
20. திரும்புதல் (Return)
21. பின் தொடர்தல் (Puersuit)
22. மீட்பு (Resene)
23. அடையாளம் தெரியாமல் வேறொரு இடம் அடைதல் (Unrecognised arrival)
24. பொய்யான உரிமை கொண்டாடல் (Unfounded claim)
25. கடும்பணி (Difficult task)
26. தீர்வு (Solution)
27. கண்டு கொள்ளல் (Recognization)

# விளாதிமிர் பிராப்- கதைமாந்தர்களின் தன்மை ஏழு

28. வெளிப்பாடு (Exposure)
29. உருமாற்றம் (Transfiguration)
30. தண்டனை (Punishment)
31. மணம் (Wedding)

இவ்வாறு 'செயற்கூறுகளை' எண்ணிவரும் பிராப், கதைமாந்தர்களின் தன்மையையும் ஏழாக எடுத்துரைக்கின்றார், அவையாவன:[9]

1. வில்லன் (போட்டியாளன் (அ) விரும்பத்தகாத கதைமாந்தர்)
2. நன்கொடையாளர்
3. உதவியாளர்
4. ஓர் ஆளுக்காகத் தேடுபவளும் (இளவரசி (அ) காதலி) அவன் தந்தையும்
5. விரைந்து செயலாற்றி முடிப்பவன்
6. தலைவன் (காதலன்)
7. போலித் தலைவன் (அ) மாறுவேடம் பூண்டவன்

இவ்வாறு கதைகளின் இயங்கு தளத்தை ஓர் அமைப்பாகக் கட்டி, மொழியின் அமைப்பிற்குள் மனிதச் செயல்பாடு அமைந்திருப்பதை அறிவியல் ஆய்வு போல நிகழ்த்திக் காட்டுகிறார்.

# பின் அமைப்பியல் – POST – STRUCTURALISM)

- அமைப்பியல் கோட்பாட்டுக்கு பிறகு எழுந்த கோட்பாடு
- ரோலாண்ட் பர்த் -எஸ்/இசட் (S/Z)1970
- பிரெஞ்சு எழுத்தாளர் பால்சாக் – சராசீன் (Sarrasine) குறுநாவல் –இருநூறு பக்க அளவில் திறனாய்வு நூல்
- யதார்த்தவாத்திற்கே உத்தரவாதம் தரத்தக்க மிகச்சிறந்த யதார்த்தவாதியும் கூட தன்னுடைய யதார்த்தவாத்ததிற்கான படைப்புத்தூண்டலை வாழ்க்கையில் அல்ல கலைகளில் இருந்துதான் பெறுகிறார்

- ழாக் தெரிதா,
- மிகயீல் ஃபூக்கோ
- லாக் லக்கான்
- ஜூலியா கிறிஸ்தவா
- காய்த்ரி சக்கரவர்த்தி
- பால் தெ மான்
- ஜொனாதன் கல்லர்
- தன்னை தானே விமர்சனத்திற்கு உட்படுத்தியதன் மூலமாகத்தான் பின் அமைப்பியல் பெரிதும் சிறப்புப் பெற்றது.

# ழாக் தெரிதாவும் வரிவடிவமும்

- ழாக் தெரிதா (1930 -2004) Jacques-Derrida
  - பிரெஞ்சு – தத்துவ அறிஞர்
  - ஐரோப்பியத் தத்துவங்கள் – ஒலிமையவாதம் (Phono Centricism), மூலப்பொருள்மையவாதம் (Logo contricism) குறையுடையன. அமைப்பியலிலும் உள்ளன.
  - ஒலிமையவாதம் - ஒலிகளின் உடனடி வடிவமான பேச்சுதான் முதன்மையானது, அடிப்படையானது, மனிதர்களுக்கு மிகவும் நெருக்கமானது. எனவே பொருளைக் குறிக்கும் செயல்பாட்டில் அதிகமான உண்மைக்குணம் உடையது, நம்பகத்தன்மை உடையது. ஒலிவடித்திலிருந்து தோன்றிய எழுத்துவடிவம் இரண்டாம் நிலையானது. மெய்மையிலிருந்து அதிகத் தூரம் விலகியது . இதை மறுத்தார் தெரிதா

# தெரிதாவின் கோட்பாடு

- மொழிக்கு மிகவும் அடிப்படையாக இருப்பது எழுத்துதான் , பேச்சுக்கு முன்னரே எழுத்தாக இருக்கும் வடிவமே (Writing)
- ரைட்டிங் என்பது எழுதப்படுவது என்ற பொருளில் அல்ல
- மொழியில் அமைந்துள்ள ஊசலாட்டத் தன்மை (Element of Undecide ability or Free play)
- புத்தகங்கள்
  - 1.எழுத்தியல்(Of Grammatology),
  - 2. எழுத்தும் வேறுபாடும் (Writing and Difference),
  - 3. பயனிலை ஒட்டின் பிற்சேர்க்கை மொழியியலுக்கு முந்திய தத்துவம் (The Supplement of Copula philosophy before linguistics)

- குறிப்பான் – குறிப்பீடு இணைந்து அர்த்தம் நிலைபெறுகிறது – அமைப்பியல்
- நிலையில்லாமல் ஊசலாடுகிறது – தெரிதா
- படி - ஓர் அளக்கும் கருவி
- படி- ஒரு நூலின் பிரதி
- சொல்லுக்கும் அர்த்தத்துக்குமான ஒருமையை ஒருபோதும் தர்க்கரீதியாக நிரூபிக்க முடியாது.
- ஒவ்வொரு சொல்லும் தன்னுடைய அர்த்தத்துக்காக மற்ற சொல்லை அண்டி நிற்கின்றது.

# பேச்சு Xஎழுத்து - தெரிதா

- பேச்சொலியிலிருந்து  எழுத்து வடிவம் தோன்றியது – ஒலிமையவாதம்
- பேச்சு போன்ற நெருக்கம் எழுத்தில் இல்லை –
- எழுத்து வடிவம் "ஓர் அபாயகரமான பிற்சேர்க்கை" என்று கருதப்பட்டதை தெரிதா மறுத்தார்
- எழுத்துவடிவம்  ஒருவகையான பதிலீடு அல்லது குறை நிரப்பி
- ஒன்றையொன்று அவாவி நிற்கும் முழுமையான பகுதிகள்
- "பேச்சு என்பது எப்பொழுதும் முன்னரே எழுதப்பட்டதாகும்" (Speech is always already Written)

# பேச்சு Xஎழுத்து - தெரிதா

- பேச்சுக்குப் பிறகு எழுத்து என்றும் இயற்கைக்குப் பிறகு பண்பாடு என்றும் வரிசைப்படுத்துமு மனிதச் செயல்பாடு வன்முறையான அல்லது மூர்க்கத்தனமான அதிகார அடுக்குமுறை (Violent Hierarchy)- தெரிதா
- பண்பாடு கலக்காத தூய இயற்கை மனித இருப்பில் எங்குமே இல்லை, - தெரிதா
- கலப்பற்ற இயற்கை என நாம் கருதுவதும் ஒரு மாயை - தெரிதா
- எழுத்து கலக்காத பேச்சு பேச்சு கலக்காத எழுத்து உண்டா- தெரிதா

# எழுத்தின் மூன்று இயல்புகள் - தெரிதா

- 1. எழுத்து தன்னை வெளிப்படுத்திய எழுவாய் ( அல்லது தன்னிலை) இல்லாமல் மட்டுமின்றி யாருக்காக வெளிப்படுத்தப்பட்டதோ அந்த வாசகர் இல்லாமல் போன காலச் சூழலிலும் உச்சரிக்கப்படுகிறது.
- 2. எழுதப்பட்ட குறி, தன்னை எந்தச் சூழலை எண்ணி எழுத்தாளன் எழுதினானோ, அந்தச் சூழலில் இருந்தும் தான் விடுதலையாகிக் கொள்ள முடியும்
- 3. எழுதப்பட்ட குறி ஒரு விதமான இடைவெளி விடுகிற செயலுக்கு (Spacing ) உள்ளாகிறது. அதாவது சொற்கள் மற்றும் வாக்கியங்களின் நடுவே இடைவெளி விடும் விதிகள் ஒவ்வொரு மொழியிலும் நிச்சயிக்கப்பட்டவைகளாக விளங்குகின்றன.

- பேச்சைவிட அதிகமாக உண்மையிலிருந்து விலகியது அல்ல எழுத்து – தெரிதா
- பேச்சு எழுத்து – என்ற வரிசைமுறையை மாற்றினார்
- “அர்த்தத்துக்கு எங்குமே மையம் இல்லை”
- உண்மைXபொய், பேச்சு Xஎழுத்து, உடல்X ஆன்மா போன்ற இணை முரண்களில் மையம் கொள்ளல் கூடாது
- இலக்கியப் பனுவலிலும் மையமான அமைப்புகளைத் திறந்து காட்டுவதை நோக்கித் (அமைப்பியல் போல்) திறனாய்வை நிகழ்த்தாமல் எந்த மையங்களுக்குள்ளும் போய்ப் புதைந்து கொள்ளாமல் விளிம்புகளை நோக்கிப் பயணம் செய்வதே பின் அமைப்பியலின் திறனாய்வு முறை

# சிதைவாக்கத் திறனாய்வு (DE CONSTRUCTION)

- டி கன்ஸ்ட்ரக்ஷன் –
- கட்டவிழ்ப்புத் திறனாய்வு – தி. சு. நடராசன்
- தகர்ப்பு அமைப்புவாதம் – எச். பாலசுப்பிரமணியம்
- சிதைவாக்கத் திறனாய்வு – ப. மருதநாயம்
  - இருக்கின்ற அர்த்தப்படுத்தும் முறைமையைச் சிதைத்து, புதியதாக ஒன்றை ஆக்குகிற முறை என்பதனால் -சிதைவாக்கத் திறனாய்வு
- உள்ளியியல் அணுகுமுறை – அ.அ.மணவாளன்
  - உள்ளி -வெங்காயம் – உரிக்க உரிக்க வேறு ஒரு அடுக்கு வருவது போல் –
  - ஒன்றின் அக அமைப்பு இன்னொன்றின் புறஅமைப்பு
  - அக அமைப்பாக இருப்பதுவே புறஅமைப்பாகவும் இருக்கிறது.
- கட்டுடைப்புத் திறனாய்வு, கட்டழிப்பு திறனாய்வு – வேறு பெயர்கள்

# ழாக் தெரிதா - சிதைவாக்கத்திறனாய்வு

- 1966- ஜான் ஹாப்கின்சன் பல்கலைக்கழகம் அமைப்புவாதம் கருத்தரங்கில் சிதைவாக்கத்திறனாய்வு தோற்றம் பெற்றது.
- 1967 இல் மூன்று புத்தகங்கள்
  - 1.எழுத்தியல்(Of Grammatology),
  - 2. எழுத்தும் வேறுபாடும் (Writing and Difference),
  - 3. பயனிலை ஒட்டின் பிற்சேர்க்கை மொழியியலுக்கு முந்திய தத்துவம் (The Supplement of Copula philosophy before linguistics)
  - 1976 இல் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு

# சசூரும் தெரிதாவும்

- சசூரின் மொழி குறித்த பல கருத்துக்களைத் தெரிதா மறுவாசிப்பு செய்தார்
- எழுத்தைவிடப் பேச்சிற்கு முக்கியத்தும் தந்தார் சசூர்
- இவ்வாறு முதன்மைப்படுத்துவதை எதிர்த்தார். தெரிதா
- குறிப்பானுக்கும் குறிப்பீட்டுக்கும் இடையே நிலவுவதாகக் கருதிய ஒருமைப்பாட்டினையும் உடைத்தார்.
  - 1. கோவலன் மனைவி கண்ணகி - பெண்
  - 2. இவள் பெரிய கண்ணகி- கற்புக்கரசி.

# மூன்று சிறப்புத் தன்மைகள் - தெரிதா

- அர்த்த வேறுபாட்டு விளையாட்டைக் குறிக்க Difference பிரெஞ்சு சொல்
- வித்தியாசப்படுத்து (Difference) ஒத்தி வை (differment)
- மொழியின் ஒழுங்கமைப்பில் அர்த்தம் என்பது வித்தியாசத்தினாலும் உற்பத்தியாகிறது. ஒத்தி வைத்தலினாலும் உருவாகிறது. – இக்கோட்பாட்டின் மூன்று சிறப்புத்தன்மைகள்.
- 1. மொழியின் கூறுகளில் வித்தியாசமும் அதன் காரணமாக அர்த்தங்கள் உருவாகும் விளையாட்டும் தொடர் ஓட்டமாக நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன.

(Difference) என்ற பிரெஞ்சு மொழிச் சொல்லைத் தானே உருவாக்கிக் கொள்கிறார். இச்சொல்லிற்கு 'வித்தியாசப்படுத்து' (Difference), 'ஒத்தி வை' (Differment) என இரண்டு அர்த்தங்கள். இதன்படி, மொழியின் ஒழுங்கமைப்பில் அர்த்தம் என்பது வித்தியாசத்தினாலும் உற்பத்தியாகிறது. ஒத்தி வைத்தலினாலும் உருவாகிறது. 'டி.ஃ.பிரன்ஸ்' என்ற வித்தியாசத்தினையும் ஒத்திப்போடுதலையும் முன்னிறுத்தும் இந்தக் கோட்பாட்டிற்கு மூன்று சிறப்புத் தன்மைகள் உள என்கிறார் தெரிதா.

1. மொழியின் கூறுகளில் வித்தியாசமும், அதன் காரணமாக அர்த்தங்கள் உருவாகும் விளையாட்டும் தொடர் ஓட்டமாக நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன.

2. மொழியில் அமையும் வெளிப்படையான கூறுகள் அர்த்தம் தரவே செய்கின்றன. ஆனால் மொழிக்குள் மறைந்து கிடக்கும் எந்தக் கூறுகள் மூலம் அர்த்த வித்தியாசங்கள் நிறுவப்படுகிறதோ அவைகளும் கண்ணுக்குத் தெரியாதபடி மொழியை அர்த்தப்படுத்திக் கொள்ளும் மனிதச் செயல்பாட்டில் தாக்கம் ஏற்படுத்துகின்றன. மறைவான இந்தக் மொழிக்கூறுகளைச் 'சுவடு' (Trace) என்ற சொல்லால் சுட்டுகிறார். இந்திய மரபில் சிந்தித்துப் பழகிய நமக்கு உள்ளுறை, இறைச்சி, தொனி ஆகிய கோட்பாடுகள் நினைவுக்கு வருகின்றன.

3. மொழியில் அர்த்தப்படுத்திக் கொள்ளும் செயற்பாங்கில் தாக்கம் ஏற்படுத்தும் பல்வேறு கூறுகளுக்கிடையே "இடைவெளி விடுதல்;" (Spacing) என்ற நிகழ்வும் ஏற்படுகிறது. எழுத்திலும் சரி, பேச்சிலும் சரி இம்மாதிரியான இடைவெளி அல்லது மௌனத்தின் ஒரு சிறு துண்டுகூட அர்த்த வித்தியாசங்கள் ஏற்படுத்துவதில் முக்கியமான பங்கு வகிக்கின்றது. ஆக, மொழிக்குள் அர்த்தம் என்பது வெளிப்படையாக இருத்தல் மூலமாகவும் நிகழ்கிறது. இன்மையின் மூலமாகவும் நிகழ்கிறது. அதாவது ஒவ்வொரு சொல்லும் தன்னுடைய விளக்கத்திற்காக மற்றொரு சொல்லை எதிர்பார்க்கிறது. அவற்றுள் ஒவ்வொரு சொல்லும் இன்னொரு அர்த்தம் தரும் வேறு சில சொற்களையும் எதிர்பார்க்கிறது. இவ்வாறு சங்கிலித் தொடராக நீண்டு அர்த்தம் ஒத்திவைக்கப்பட்டுக் கொண்டே போகிறது. இவ்வாறு அலைபாயும் ஒத்தி வைத்தலில்தான் இருப்பு உள்ளதே ஒழிய, அர்த்தத்துக்கான மையம் என ஒன்று எங்கும் கிடையாது. இப்படியான விவாதத்தின் மூலமாகத்தான், இலக்கியப் பனுவலின் மையத்தைத் தகர்த்து உடைக்கிறார் தெரிதா[20].

# சிதைவாக்கத்திறனாய்வு - நோக்கம்

- 1. வெளிப்படையாகத் தெரியும் தோற்றங்களுக்குப் பின்னால் மறைவாக நிகழும் ஆதிக்க அரசியலை வெளிப்படுத்த.
- 2. தோற்றங்கள் உண்மையல்ல என்பதை உணர்த்த.
- 3. அறிவு மற்றும் ஆதிக்க அதிகாரங்களின் விளையாட்டில் அமுங்கிக் கிடக்கும் அர்த்தங்களைத் திறந்து காட்டுதல்
  4. மறைக்கப்பட்ட அர்த்தத்தை பெருவாரியான மக்களுக்குக் கொண்டு செல்லுதல்.

# சிதைவாக்கத் திறனாய்வு - ழாக் லக்கான்

- ழாக் லக்கான் – உளவியல் அறிஞர்
- சிக்மண்ட் ஃபிராய்டின் உளவியல் கோட்பாடுகளை மறுவாசிப்புக்கு உட்படுத்தினார்.
- லக்கான் உளப்பகுப்பாய்வில் ச்சூரைப் போலவே மொழிக்கு முதன்மை கொடுத்தார்
- இவருடைய ஆய்வு இலக்கியத் திறனாய்வுக்கு மனிதத் தன்னிலை (Subject) என்ற புதிய கோட்பாட்டை வழங்கியது.
- மனிதக் குழந்தை மொழியெனும் குறியீட்டு உலகிற்குள் நடமாடத் தொடங்கிய பிறகுதான் உருவாகிறது என்று மொழியை முதன்மைப்படுத்தி விளக்கினார்.

- தன்னைத் தனியாகவும் பிறரை மற்றவையாகவும் அடையாளம் காண்பதற்குத் தேவையான சுயம் (Self) மொழி மூலமாகத் தான் குழந்தைக்குக் கிடைக்கிறது
- குழந்தை மனிதராக வளர்வதற்கு அது பிறரை மற்றவர்களாக உணர வேண்டியது அவசியமாகிறது

# அமைப்பியலுக்கும் பின் அமைப்பியலுக்கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமைக்கூறுகள்

பின்-அமைப்பியல்.

## அமைப்பியலுக்கும் பின்-அமைப்பியலுக்கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமைக் கூறுகள்

மிகவும் நுட்பமும் சிக்கலும் வாய்ந்த அமைப்பியல் மற்றும் பின் அமைப்பியலின் அடிப்படைக் கருத்தாக்கங்கள் இரண்டிற்கும் பொதுவானவைகள்தான். அவைகளைக் கீழ்க்கண்டவாறு வரிசைப்படுத்திக் கொள்ளலாம்.

1. அமைப்பியல் சிந்தனைகள் சசூரின் மொழி குறித்த புதிய பார்வையில் இருந்து கிளைத்து எழுந்தவைதான். அதற்கு முன்பு மொழி என்பது வெறும் தகவல் கருவி, வெறும் பெயர்ப்பட்டியல். மனிதர்களின் தயவில் மொழி இருக்கிறது என்ற கருத்துக்கள் நிலவி வந்தன. சசூர் இவைகளைத் தலைகீழாக மாற்றிப் போட்டார். மொழி ஓர் ஒழுங்கமைப்புக் (Sign-System) குறிகளால் ஆனது; தன்னிசையானது.

2. குறி என்பது (Sign) குறிப்பானும் குறிப்பீடும் சேர்ந்து செயலாற்றும் ஓர் அமைப்பு.

3. மொழி, அரூபமான மொழிக்கிடங்கு என்ற கூறினையும் ரூபமான பேச்சு (Parole) என்ற கூறினையும் கொண்ட ஒழுங்கமைவு.

4. மொழியின் அமைப்பு தன்னிசையானது; அவைகளுக்கிடையே உருவாகும் அர்த்தம், வித்தியாச உறவுகளால் உருவாக்கப்படுகின்றது.

5. முழுமையான அர்த்தமோ அல்லது அதன் பகுதிகளோ மொழிக்கு வெளியே புறம்பாக இல்லை. மேலும் இந்த அர்த்தங்கள் மொழியின் அமைப்புப்படிதான் நிச்சயிக்கப்படுகின்றன.

இவ்வாறு அமைப்பியல் ஆய்விற்கு அடிப்படைகளாக விளங்கும் இவைகளிடமிருந்து பின் அமைப்பியல் எந்தெந்த இடங்களில் விலகிச் செல்கிறது? என்பதைச் சொல்வதன் மூலமாகவும் இக்கொள்கைகள் இரண்டையும் எளிதில் புரிந்துகொள்ள வழி ஏற்படலாம்.

1. மேலே கூறிய ஐந்து அடிப்படைகளில் இரண்டாவதாகக் கூறப்பட்ட அர்த்தம் என்பது குறிப்பான், குறிப்பீடுகளால் ஐக்கியப்பட்டுக் கிடக்கிறது என்ற சசூரின் கருதுகோளுக்கு மட்டுமே பின் அமைப்பியல் அறைகூவல் விடுத்தது. அதாவது, குறிப்பான், குறிப்பீடு, குறி என்ற முறையில் அர்த்தத்தை ஐக்கியப்படுத்த முடியாது. காரணம், அர்த்தங்கள் மையமிழந்தவை; நிலையற்றவை; ஒத்திவைப்புக்குள்ளாகின்றவை என விளக்கியது.

2. அர்த்தம் நிச்சயமற்றது என்ற நிலையில் இலக்கியப் பனுவல் தன்னிறைவு பெற்றதாக அமைய முடியாது. எனவே, இலக்கியப் பனுவல் புறவயப்பட்ட ஒரு பொருள் என்பது காட்சி மயக்கமன்றி வேறில்லை.

3. ழாக் லக்கானின் கருத்துப்படி மனிதத் தன்னிலையும் மையமிழந்தது என்பதால், எழுத்தாளனுக்கு இலக்கியப் பனுவலின் மேல் தனிப்பட்ட உரிமை கிடையாது. எனவே பனுவலிலிருந்து அர்த்தத்தை உற்பத்தி செய்து கொள்ளும் செயற்பாடு வாசகர்களால் தொடர்ந்து நிகழ்த்தப்பட்டுக் கொண்டேயிருக்கிறது.

4. பனுவலின் அர்த்தங்கள் பனுவலுக்குள் மறைந்து அடங்கிக் கிடக்கின்றன. வாசகர்தான் பனுவலுக்கான அர்த்தங்களை வெளிக்கொணர்கிறார். எனவே, அர்த்த உற்பத்தியில் பனுவல், வாசிப்பு, வாசகர் ஆகிய மூன்றுக்கும்தான் இடமுண்டு; படைப்பாளிக்கு இல்லை.

5. பனுவல் குறித்த எந்த வாசிப்பும் இறுதியானது அல்ல; எந்த விளக்கமும் இறுதியான விளக்கமும் அல்ல. எனவே, இலக்கியத் தளத்தில் வரலாற்றைப் புறக்கணிக்கச் சாத்தியம் இல்லை.

6. படைப்பாளி, வாசகர் என்ற அடையாளங்கள் எல்லாம் திறனாய்வுச் சொல்லாடல்களால் விளைந்த உருவாக்கங்களே.

7. ஒரு பனுவலுக்கான அர்த்தத்தின் வினை புரிதல் என்பது வாசகரோடு சேர்ந்து இணைவது. அந்த வாசகரோ அரசியல் நிலவும் ஒரு சமூகத்தில்

வாழ்பவர். எனவே, இலக்கியத்தை அரசியல் பரிணாமத்திலிருந்து முற்றிலும் விலக்கி வைக்க முடியாது.

8. பனுவலுக்குக் கற்பிக்கப்பட்டுள்ள மரபான அர்த்தங்களுக்குள் வினைபுரியும் ஆதிக்க அரசியலை, அடையாளம் கண்டு அதற்கு நேர்மாறான அர்த்தத்தை பனுவலுக்கு வழங்க முடியும் என்கிறது பின் அமைப்பியல். இத்தகைய இடத்தில் பின் அமைப்பியல் புரட்சிகரமான விதைகளைக் கொண்டுள்ளது.

9. அர்த்தங்கள் மையமிழந்தவை; அதற்கு எங்குமே முற்றுப்புள்ளி கிடையாது என்பதைப் பின் அமைப்பியல் வலியுறுத்துவதால் இதுதான் பின் அமைப்பியலுக்கான "கவிதையியல்" என ஒன்றைச் சுட்டிக்கூற மறுத்துவிடுகிறது பின் அமைப்பியல்.

இவ்வாறு சுருக்கமாக இக்கோட்பாடுகளைத் தொகுத்துக் கொள்ளும் போது புரிதலின் தளம் பன்மடங்கு உயர்வதற்கு வாய்ப்பிருக்கிறது எனக் கருதலாம்.

# 11. எடுத்துரைப்பியல் திறனாய்வு

அலகு -4

ப. ரமேஷ்

# உள்ளடக்கம்

- முன்னுரை
- எடுத்துரைப்பின்  அடிப்படை அலகுகள்
- இணைதலின் விதிமுறைகள்
- கதையும் கதைமாந்தர்களும்
- கதைமாந்தரும் செயலும்
- பனுவலும் காலமும்
- பனுவலும் நோக்கு நிலையும்
- எடுத்துரைப்பின் பல்வேறு படிநிலைகள்
- எடுத்துரைப்பில் பேச்சு பெறும் இடம்
- பனுவலும் வாசித்தலும்

# முன்னுரை

- எடுத்துரைப்பியல் (Narratology)
- கதை சொல்லுதல், கதையாடல்
- அமைப்பியல் கோட்பாடுடன் நெருங்கிய தொடர்பு
- மொழியின் செயலை ஆராயும் கோட்பாடு
- ஒரு நிகழ்ச்சி மொழிப்படுத்தும் போது நடக்கிற மாற்றங்களையும் அந்த மாற்றங்களை நிகழ்த்துகிற மொழியின் தன்னிச்சையான செயல் போக்கினையும் அடையாளம் கண்டு கொள்ள இக்கோட்பாடு உதவுகிறது.
- "ஹெரால்டு ஜெனேத்" புதிய கலைச் சொற்களை வடிவமைத்தவர்
- எடுத்துரைப்புச் சொல்லாடல் ( Narrative Discourse -1980)
- இரஷ்ய நாட்டு "விளாதிமர் ஃப்ராப் – நாட்டுப்புறக் கதைகளின் இயற்கை வடிவ ஆராய்ச்சி நூல் (1928) புதிய கோட்பாடு சிந்தனைத் தளத்திற்கு வித்திட்டவர்
- "நாவல் இலக்கியத்தைத் திறனாய்வு செய்யப் பயன்படுத்தியவர் "மிகயீல் பக்த்"
  - நாவலுக்குள் இயங்கும் பல்வேறு குரல்கள், நிகழ்ச்சிகள் கரைச் சொல்லியின் ஒரே குரல்தான் என்பதை மறுத்தார்
  - எந்த ஒரு பனுவலுக்குள்ளும் பல்வேறுபட்ட குரல்கள் ஒன்றை ஒன்று நெருக்கிக் கொண்டு கிடக்கின்றன
  - பனுவல் தன்னுள் ஒருமை கொண்டிருப்பது அல்ல ஒவ்வொரு பனுவலும் ஒருமையற்று,முட்டி மோதுகின்ற பல்வேறு நிலையற்ற நிலைப்பாடுகளைக் கொண்டிருக்கின்றன.

- எடுத்துரைப்பும் போதாமைகளும் (1981) - ஏ.டி.மில்லர்
  - ஒருபனுவல் என்பது முடிவற்ற ஒரு திறந்த வெளியாகவும் இல்லை, முடிந்த முடிவாகவும் இல்லை.
- அனைத்துக்கூறுகளையும் ஒன்றிணைத்து பல்வேறு கருத்தாக்கங்களைக் கட்டமைக்கிறது.
- கருத்துலகத்தில் எழுப்பப்படும் வினாக்களுக்கெல்லாம் முடிந்த முடிவான பதில்கள் என்பது எப்போதும் இல்லை.
- பனுவலுக்குள் வெளிப்படையாகவும் மறைவாக மூடுண்டும் அசைந்து கொண்டும் கிடக்கும் பல்வேறு குரல்களை வெளிக்கொணர முடிகிறது.
- திரும்பத் திரும்பவரும் ஒரே வகையான அமைப்பினைக் குறித்தும் அடையாளம் காண முடிந்திருக்கிறது.

# எடுத்துரைப்பின் அடிப்படை அலகுகள்

- ஒன்றை எடுத்துரைப்பதற்கு அடிப்படை அலகுகள்
  - 1.நிகழ்ச்சிகள்
  - 2. மொழி (அல்லது) வார்த்தைக் குறியீடுகள்
  - 3. எடுத்துச் சொல்லும் செயல்பாடு
- இம் மூன்று அலகுகளும் இலக்கிய எடுத்துரைப்பில்
  - 1. கதை (Story)
  - 2. பனுவல் (Text)
  - 3. எடுத்துரைப்பு (Narration)
- கதை – தொடர்நிகழ்ச்சிகள்
- பனுவல் – அந்நிகழ்ச்சிகளைக் கோப்பதன் மூலம் ஒரு சொல்லாடலைக் கட்டமைக்கிறது.
- எடுத்துரைப்பு என்பது பனுவலை உருவாக்கும் செயல்பாட்டுப் படிமுறை
- இம்மூன்றும் ஒன்றையொன்று சார்ந்து இயங்கும்போதுதான் புனைவு இலக்கியங்கள் தோன்றுகின்றன.

# இணைதலின் விதிமுறைகள்

- மேற்சுட்டியவை ஒழுங்கான தொடர்ச்சிகளாக மாறுவதற்கும் ஒழுங்கான தொடர்ச்சிகள் எவ்வாறு கதையாகின்றன என்பதற்கான விதிமுறைகள்
  - 1. காலம் சார்ந்த தொடரொழுங்கு
  - 2. காரண காரியத் தொடரொழுங்கு
- மனித மூளை நிகழ்ச்சிகளை இணைத்துக் கதையாக வளர்த்தெடுத்துக் கொள்கிறது. காரண காரியக் கோட்பாட்டைப் பயன்படுத்தும் போது கதையில் பிரச்சனை இல்லை
- பனுவலின் உயிரே பிரச்சனையில்தான் மையம் கொண்டிருக்கிறது.
- எனவே இலக்கிய பனுவல் ஒரு கட்டத்தில் காரண-காரிய உறவுக் கோட்பாட்டை சிதைத்துவிட்டுத் தாவிச் சென்று விடுவதாகப் பாவனை செய்ய முயலுகிறது. இந்தப் பாவனைதான் இலக்கியத்தின் உயிர்.

# கதையும் கதைமாந்தர்களும்

- எடுத்துரைப்பில் கதைமாந்தர்கள் இன்றியமையாத இடம்
- கதைமாந்தர்கள் மனிதர்கள் போல் இறப்பதில்லை. மிக நுட்பமாக ஒரு தளத்தில் இயங்கி வருகிறார்கள் – மரபார்ந்த பார்வை
- கதைமாந்தர் இறந்து விட்டார் – ரோலண்ட் பர்த் (அதாவது மனிதப் பண்பின் குறியீடாக இல்லை என்பது)
- கதைமாந்தருக்கு நிலையான பண்பு இல்லை – பெண்ணியத்திறனாய்வாளர் ஹெலன் சிக்ஸ்ஸ்
- தன்னிலையின் ஓர்மை
  - தான் என்பது எப்பொழுதும் ஒன்றுக்கு மேற்பட்டதாக இருக்கிறது. ஒரு கட்டத்தில் சமூகத்தில் இருக்கும் எல்லாமுமாகவும் வாழ்கிற திறமை மிக்கதாகவும் இருக்கிறது. ஒரு குழுவாக இயங்குகின்ற தன்மையுடையதாகவும் இருக்கிறது.
- தவறாகப் புரிதல் . இந்தப் பண்பின் அடிப்படையில் தான் கதைமாந்தர்கள் உருவாகிறார்கள்

# கதைமாந்தரும் செயலும்

- கதைமாந்தர் பற்றிய சிக்கல் – செயல் என்ற கூறினைக் கொண்டு விளக்குவது அமைப்பியல்
- பிராப் செயல் என்னும் எல்லைக்குள் கதைமாந்தர்களை அடக்க முயலுகிறார்
- ஏழு செயல்களுக்குள் எல்லாக் கதைமாந்தர்களையும் அடக்கி விடலாம்
  - 1. வில்லன்
  - 2. நன்கொடையாளன்
  - 3. உதவியாளன்
  - 4. ஓர் ஆளுக்காகத் தேடுபவளும் அவளது தந்தையும்
  - 5. விரைந்து செயல்படுபவன்
  - 6. தலைவன்
  - 7. போலித் தலைவன்
- ஹென்றி ஜேம்ஸ் –
  - "கதைமாந்தர் என்றால் என்ன? நிகழ்ச்சியைத் தீர்மானிக்கின்ற ஒன்றா? நிகழ்ச்சி என்றால் என்ன ? கதைமாந்தரை விளக்குகின்ற ஒன்றா?
  - கதைமாந்தரைச் சார்ந்து செயலும் செயலைச் சார்ந்து கதைமாந்தரும் படைப்புக்குள் இயக்கம் மேற்கொண்டுள்ளனர் என்று கருதுவதே பொருத்தமெனப் படுகிறது.

# கதைமாந்தர்கள் வாசகனுக்குள் பெறும் உருவம்

- கதைமாந்தர்கள் எவ்வாறு வாசகனுக்குள் உருவம் பெறுகின்றனர்?
- 1. திரும்பத் திரும்ப வருதல்
- 2. ஒத்திருத்தல்
- 3. முரண்படுதல்
- 4. குறிப்பாக அமைதல்
- ஒரு பனுவலுக்குள் இயங்கும் அமைப்பியல் சார்ந்த ஒரு முறையியல் மூலமாகத்தான் கதைமாந்தர் வாசகனுக்குள் உருவம் பெறுகிறார்

# பனுவலும் காலமும்

- மனிதப் பண்பாடு காலம் என்ற ஒன்றை ஒரு முகப்பட்ட இயங்கு நிலையாகவும் நம்மால் மாற்ற முடியதாபடிப் பொங்கி ஒழுகுகின்ற ஒன்றாகவும் ஒரு வகையான ஒருவழிப்பாதை போன்றது என்பதாகும் சிந்தனை செய்து பழகியுள்ளது.
- காலம் என்பது கதையை உருவாக்கக் கூடிய நிகழ்ச்சிகளைப் பனுவலாக ஒழுங்குமுறைப்படுத்தப் பயன்படுகிறது.
- திரும்ப திரும்ப நிகழ்கின்ற ஒரு கரு
- சொல்லுகின்ற கருவியாகிய மொழியை வடிவமைப்பதும்கூட காலம் தான்

# எடுத்துரைப்பியில் காலம்

- மூன்று வகையாக
  - 1. ஒழுங்கு (order)
  - 2. நிகழ்ச்சி நடக்கும் காலஅளவு (Duration)
  - 3. தொடர்நிகழ்வு (Frequency)
  - எடுத்துப்பின் ஆற்றல் வாய்ந்த செயல்பாட்டினை புரிந்து கொள்ள உதவும்
- செல்வாக்கான எடுத்துரைப்பு போக்கு – ஒழுங்கற்ற கால முறையாகும்
  - கால ஒழுங்கற்ற முறையில் எடுத்துரைக்கும் போக்கு (கோணங்கியின் பாழ் நாவல்) வாசகன் கால ஒழுங்கிற்கு உட்படுத்தியே பனுவலைப் புரிந்து கொள்கிறான்.

# பனுவலும் நோக்கு நிலையும்

- ஒரு பனுவலின் கதையென ஒன்று ஒரு காட்சிக் கோணத்தின் ஊடாகத் தான் சொற்களால் முன்வைக்கப்படுகிறது.
- ஜெனேத் -நோக்கு நிலை (Focalization)
- நோக்குநிலையில் வினைபுரியும் பல கூறுகள்
- 1 இடம் அ) வெளி
- 2. காலம்
- 3. அறிதல் கூறு
- 4. உணர்ச்சிக் கூறு
- 5. கருத்துநிலைக் கூறு
- 6. உளவியல் கூறு
- ஒரு பனுவலை வாசிக்கும் போது வாசிக்கின்ற போக்கில் கதைசொல்லியின் நோக்கு நிலையில் நின்று வாசகனும் நிகழ்ச்சிகளை புரிந்து கொள்ளகின்றவனாக மாற்றப்படுகிறான்.
- வாசகனின் நோக்கு நிலைகளை நிர்ணயிக்கிறவனாகக் கதை சொல்லியின் பன்முகப்பட்ட ஆளுமை வாசகன் மேல் வினைபுரிகிறது.
- இந்த ஆளுமை இல்லாத கதைசொல்லி தன் முயற்சில் தோற்றுப் போவான்

# எடுத்துரைப்பின் பல்வேறு படிநிலைகள்

- கதைச்சொல்லி நிகழ்ச்சிகளை எடுத்துரைக்க முனையும் போது பல்வேறு படிநிலைகள் வந்து அமைகின்றன.

- 1. செயல்படும் நிலை (Actional Function)
- 2. விளங்க வைக்கும் நிலை (Explicative Function)
- 3. அடிக்கருத்து நிலை (Thematic Function)
- 4. பின்புலம் குறித்த விவரிப்பு ( Description of setting)
- 5. கதைமாந்தர்களை அடையாளப்படுத்துதல் (Identification of characters)
- 6. காலம் சார்ந்த சுருக்கம் (Temporal Summary )
- 7. கதைமாந்தர்களை அடையாளப்படுத்துதல் (Identification of Characters)
- 8. விளக்கிச் சொல்லுதல் (Commentary)
- 9. அடிக்குறிப்பு (
- 10. நம்பகத்தன்மை (Reliablility)
- 11. எடுத்துரைப்பைப் கேட்பவர் ( Narratee)

# எடுத்துரைப்பில் பேச்சு பெறும் இடம்

- 1. நேரடிப் பேச்சு
- 2. மறைமுகச் சொல்லாடல்
- 3. சுருக்கம்
- 4. போலச்செய்தல்
- 5. மொழியியல் கூறுகள்
- 6. பன்முகப்பட்ட சொல்லாடல்

# பனுவலும் வாசித்தலும்

- பனுவலை வாசகனின் பார்வையில் இருந்து பார்க்கவேண்டும்
- எந்தவொரு பனுவலும் தனக்கான வாசகர் என்ற நிலையில் உருவாக்கப்படுகிறது.
- வாசகரும் தனக்கான பொருளை தாங்களே உருவாக்கிக் கொள்கின்றனர்.
- வாசகர்களின் பல வகைகள்
- 1. உண்மையான வாசகர் (Actual Reader)
- 2. மேலான வாசகர் (Super Reader)
- 3. அறிவார்ந்த வாசகர் (Informed Reader)
- 4. இலட்சிய வாசகர் (Ideal Reader)
- 5. மாதிரி வாசகர் (Model Reader)
- 6. உள்ளுறை வாசகர் (Implied Reader)
- 7. கொள்கை வாசகர் (Encoded Reader)

# பனுவல் உருவாக்கத்தில் வாசகன்

- 1. காலம் தாழ்த்துதல்
- 2. இடைவெளிகள்
- 3. மர்ம முடிச்சுகளை அமைத்தல்
- ஐசர்
  - எந்தவொரு கதையும் முழுமையாகச் சொல்லப்படுவதில்லை சில கூறுகளை நீக்கிவிட்டுச் சொல்வதன் மூலமாகத்தான் ஒரு கதை தனக்கான இயக்கத்தைத் தக்கவைத்துக் கொள்கிறது. கதையின் ஓட்டம் எப்பொழுது தடைபடுகிறதோ, கதை எப்பொழுது எதிர்பாரத திசையில் வாசகரை இழுத்துச் செல்லத் தொடங்குகிறதோ அப்போதெல்லாம் வாசகர் தன் சொந்த காரண-காரிய அறிவு மூலம் தொடர்வினை நிறுவிப் பனுவல் விட்டுச் சென்ற இடைவெளிகளை நிரப்பிக் கொள்வதற்கான வாய்ப்பு கிடைக்கிறது.